**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2015**

---

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரம்) 213 ஈ (5) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகள், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் ஒதுக்கங்களிற்கான ஏற்பாடுகள் முறையே ரூபா 4,232,599 மற்றும் ரூபா 5,792,890 தொகைகள் நிதிச்செயலாற்றல் கூற்றில் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் கணிப்பிடப்பட்ட மிகைகள் முறையே ரூபா 4,232,599 இனாலும் ரூபா 5,792,890 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களின் பெறுமதி என்பன நிதி நிலைமைக் கூற்றில் முறையே ரூபா 7,059,901 ஆகவும் ரூபா 11,490,009 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் சரியான பெறுமதிகள் முறையே ரூபா 7,099,095 ஆகவும் ரூபா 11,462,147 ஆகவும் இருக்க வேண்டியிருந்தன.

**2.3 செலுத்த வேண்டிய மீதிகள்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 6,610,646 மற்றும் ரூபா 1,273,712 தொகையான மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு மீளச் செலுத்த வேண்டிய ரூபா 7,434,358 கூட்டுப்பெறுமதியொன்று 2016 மே 13 ஆந் திகதி வரையிலும் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | |
| (அ) 03.2(ஆ) பந்தி | செலுத்தவேண்டிய பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்வு செய்ததன் பின்னர் எஞ்சுகின்ற மேலதிக பணம் தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,404,676 மிகைப் பணம் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 04.2(ஈ) பந்தி | நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்றும் புத்தகமும் பேணப்பட்டுச் செல்லப்படுமாயின் அந்தக் கணக்குகள் இணக்கஞ் செய்யப்பட்டு முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்கான அறிக்கை அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 04.3 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் 2015 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையொன்று அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குப் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 06(இ) உப பந்தியின் பிரகாரம் சகல படிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பாக பொது நிருவாக அமைச்சின் ஊடாக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிடம் விசாரித்து ஆலோசனை வழங்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட முறைமையின் பிரகாரம் பதவியணியினருக்காக ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது மீளாய்வாண்டில் அச் செலவினம் ரூபா 108,726,084 ஆக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 8,825,357 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,458,547 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 2,633,190 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஊக்குவிப்புப்படி வருமானம் ரூபா 24,995,943 இனால் அதாவது 28 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், ஊக்குவிப்புப் படி செலுத்துகைகள் ரூபா 28,181,091 இனால் அதாவது 35 சதவீதத்தால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------

### 4.1 செயலாற்றல்

--------------------

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயலாற்றலை மேலோங்கச் செய்தல் மற்றும் மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தை உரியவாறு அமுல்படுத்துவதற்காக திணைக்களத்தின் பதவியணியினரை உரியவாறு அர்ப்பணிக்கச் செய்தல் நிதியத்தின் பிரதான நோக்கமாக இருந்ததுடன் அதற்காக பின்வரும் கொடுப்பனவுகளைச் செய்ய முடியுமாக இருந்தது.

(அ) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஏதாவது மோட்டார் வாகனமொன்றை மாற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல் மற்றும் பின்னர் வழக்கு தொடரக்கூடிய பிழையான செயற்பாடுகளைக் கண்டறிவதில் மற்றும் வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கான கொடுப்பனவுகள்

(ஆ) பதவியணியினருக்குச் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஊக்குவிப்புப் படிகள், பயிற்சிகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் விளையாட்டு, விநோத மற்றும் நலன்புரிச் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவு

(இ) பாராட்டப்படக்கூடிய அல்லது விஷேட மதிப்பீடொன்று தேவையான திணைக்களத்தின் பதவியணியினர்களின் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் நிர்வாகச் செலவினத்திற்கான கொடுப்பனவுகள்

எனினும் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனமொன்றை மாற்றுதல் தொடர்பான தகவல்களை வழங்கும் பிழையான செயற்பாடுகளைக் கண்டறிவதில் மற்றும் ஈடுபடும் பதவியணியினருக்கான பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள் மற்றும் பாராட்டப்படக்கூடிய மற்றும் விஷேட மதிப்பீட்டிற்கான முறையான வேலைத்திட்டமொன்று நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 07 செலவின விடயங்களில் 46 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களையும் கணக்கீட்டுத் தத்துவங்களையும் பின்பற்றுதல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.